Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 03 | 18 - 07 - 1992 | சனிக்கிழமை | ஓசை 151

## போதைப்பொருள் பாவனை இலங்கையில் 50,000 பேர்

(கொழும்பு)

சிறிலங்காவில் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையானவர்கள் நாளொன்றுக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் உபயோகிப்பதாக பொலிஸ் போதைவஸ்துப் பிரிவின் ஆய்வொன்று தெரிவிக்கின்றது. 1991ஜனவரியில் பாவிக்கப்பட்ட போதைவஸ்துவின் பெறுமதி நான்கு இலட்சம் ரூபா என்றும், இதே ஆண்டு செப்ரெம்பரில் இது பதினெட்டு இலட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளதென்றும் பொலிஸ் போதைவஸ்துப் பிரிவின் 1991 ஆம் ஆண்டிற்கான அறிக்கை தெரிவிக்கின்றது. சிறிலங்காவில் ஹெரோயின் பாவனையாளர் ஒருவர் நாளொன்றுக்குச் சராசரி 50 மில்லிகிராம்ஹெரோயின் உட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டு ராணுவ நடவடிக்கை குறித்து பாதுகாப்பு வட்டாரத்தில் குழப்பம்

## புலிகளின் போர் யுத்திகளால் படையினர் மனவுறுதி தளர்வு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் மீதான அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை குறித்து சிறிலங்கா இராணுவ உயர் மட்டங்களில் பலத்த கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை விடுதலைப் புலிகள் போர்க்களத்தில் கையாளும் புதிய யுத்திகளும் அவற்றால் இராணுவத்தரப்பிற்கு ஏற்பட்டுவரும் பேரிழப்புக்களும் சிப்பாய்களின் மனஉறுதியை தளர்வடையச் செய்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டின் மீது படையெடுப்பு மேற்கொள்ளப்படுவதனால், இராணுவத் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்படும் எனவும், இதனால் பல எதிர் விளைவுகள் ஏற்படலாம். பாதுகாப்பு வட்டாரங்களில் உள்ள ஒரு பகுதியினர் கருதுகின்றனர். இவ்வாறு உயிரிழப்பு ஏற்படும்பட்சத்தில் கைப்பற்றியஇடங்களைராணுவத்தால் தொடர்ந்தும் பாதுகாக்கமுடியுமாஎனவும் கேள்வி எழுப்புகின்றனர். அத்தோடு, தற்பொழுது இராணுவத்தில் நிலவும் ஆட்பற்றாககுறையும் இத்தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தைவெற்றி கொள்வதன் மூலமே புலிகளைப் பலமிழக்கச் செய்யலாம் எனவும், இராணுவ வெற்றியை ஈட்டலாம் எனவும் கருதும் இராணுவத் தரப்பின் ஒருபகுதியினர் விரைவில் யாழ். குடாநாட்டின் மீது படையெடுப்பு நடத்தப்பட வேண்டும் என வாதிடுகின்றனர்.

மேற்குறிப்பிட்டவாறு இராணுவ உயர் பீடத்தில் யாழ். குடாநாட்டின் மீது படையெடுப்புப் பற்றி தளபதிகள் மட்டத்தில் முரண்பாடுகள் நிலவும் அதேவேளைமுன்னணியில் போரிடும் சிப்பாய்களின் மனவுறுதி பெருமளவில் குன்றியுள்ளது. புலிகளுடனான போரில் பெருமளவில் இராணுவத்தினர் கொல்லப்படுவதும் காயமடைவதுமே இவர்களின் மனத் தளர்ச்சிக்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

## புதிய தாக்குதல் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லையாம்

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள போதிலும் இன்னமும் புதிய தாக்குதல் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்று சிறிலங்காவின் கூட்டுப்படை தலைமையலுவலக பேச்சாளரான சரத்முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சரத்முனசிங்கா மேலும் தெரிவிக்கையில்;

யாழ். கடல்னீரேரிப் பகுதி நடமாடக் கூடாத பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இரவு நேரங்களில் அப்பகுதி போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படுவதாக தெரிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

### பரீட்சை

இலங்கை நிர்வாகசேவையின் இரண்டாம் வகுப்பு, தரம் இரண்டிற்கான திறமை அடிப்படையிலான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது. (க)

## எல்லைப்புறகாவலரண்கள்மீது புலிகள் கடும் தாக்குதல்

அனுரதபுரம் எல்லைப் பகுதியிலுள்ள இராணுவ காவலரண்களில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கள் காலை அனுராதபுரம் எல்லைப் பகுதியிலுள்ள நலந்தாவ,வீரவெல, கடமன,அளுத்கம ஆகிய காவல் நிலைகள் விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகின.

இத்தாக்குதல்களைஅடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் இந் நான்கு காவல் நிலைகளில் இருந்தும் ஏனைய பல காவலரண்களிலிருந்தும் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

பின்வாங்கிச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் பிரதான முகாம்களிலிருந்து குடிமனைகளை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

## ராணுவ சுற்றி வளைப்பில் 6தமிழர் சுட்டுக்கொலை இருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவச் சுற்றிவளைப்பில் ஆறு அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பழுகாமம், கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, உன்னிச்சை, 19 ஆம் கட்டை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை வெளியேறி வந்த இராணுவத்தினர் சாமந்தி ஆறு, நெல்லிக்காடு, பாலம்போட்டமடு, உப்புக்குளம் ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்தனர்.

அப்போது உலங்குவானூர்தியொன்று 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. சுற்றிவளைத்த இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்டபடி சுட்டதில் ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இருவர் கைது செய்யப்பட்டனர். ஐந்து வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பல பெறுமதியான பொருள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கூட்டுப்படை தலைமையக

## குண்டுவெடிப்பு தொடர்பாக 6 பேர் மீது குற்றப் பத்திரிகை

(கொழும்பு)

வன்செயல்களில் ஈடுபடுவதற்

ணத்தைவெற்றி கொள்வதன் மூலமே புலிகளைப் பலமிழக்கச் செய்யலாம் எனவும், இரா

லக பேச்சாளரான சரத்முன சிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்

கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கில் கடமையாற்ற பொலிசாருக்கு ராணுவ பயிற்சி

(கொழும்பு)

சிறிலங்காறிசேர்வ் பொலிஸ் படைக்கு புதிதாக 3700 பேர் திரட்டப்பட உள்ளனர். இவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள இராணுவக் கட்டுப் பாட்டு பகுதிப் பொலிஸ்நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் தற்பொழுது நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இராணுவப் பயிற்சி இரண்டு பொலிஸ் பிளாட்டூன்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 'புலிகள் மீது இந்தியா தடை' கருத்தரங்கு ரத்தானது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது இந்தியா விதித்துள்ள தடையும் சிறிலங்காவில் அதன் தாக்கங்களும் என்னும் தலைப்பில் கொழும்பில் நடைபெறவிருந்த கருத்தரங்கு கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது. அகில இலங்கை முஸ்லிம் லீக் அமைப்பினரால் சாசகவா மண்டபத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இணைப்பை ஐ. தே. க. ஆதரித்தால் சுதந்திரக்கட்சிக்கு பிரச்சினை இல்லை

**- அனுரா**

(கொழும்)

''தமிழ்க் கட்சிகளின் நான்கு அம்சத் திட்டத்தில் வடக்குக் கிழக்கு இணைப்பு விடயமே பெருப்பான்மை கட்சிகளின் மத்தியில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இணைப்பை ஆளுங் கட்சி யான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரித்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பொறுத்த வரை பிரச்சினை இருக்காது''

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

# தமிழர் இழந்தவற்றைப் பெற ஹெல உறுமய பாடுபடுமாம்

(கொழும்பு)

ஹெல உறுமய அமைப்பானது தமிழர்களுக்கு எதிரானது அல்ல என்றும், அது சிங்கள, முஸ்லிம் மற்றும் வடக்கு-கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்கள் இழந்தவற்றைப் பெறுவதற்காகவே பாடுபடுகிறது என்றும் களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியும், ஹெல உறுமயவின் அமைப்பாளர்களில்ஒருவருமானதிலக் கருணரத்னா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ஹெல உறுமய பருத்தித்துறை முதல் தொந்தர வரையிலும், கொழும்பு முதல் மட்டக்களப்பு வரையிலும் வாழும் மக்கள் எங்கும் சுதந்திரமாக நடமாடவும் வாழவும் வேண்டும் என்பதுவே ஹெல உறுமயவின் கொள்கை என்றும், இந்த உரிமையானது சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், தமிழர்களில் சிலருக்கும் மறுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு இணைக்கப்படுவதை ஹெல உறுமய எப்போதும் எதிர்க்கும் என்றும் ஏனெனில் அது ஈழத்தை உருவாக்க வழிசமைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பந்தமாக அண்மையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆறு பேரிடம் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நவலக்ஷ்மி கதிரவேலு அல்லது இந்திரா, சாந்தினி சிவலோகநாதன், சுகந்தினி விஜயகுமார், அருணாசலம் சுரேந்திரன், இராசையா நடராசா, சிதம்பரம் செல்லத்துரை, அல்லது பரா ஆகியோர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூட்டுப்படைத்தலைமையகத்தை தகர்ப்பதற்கு வரதன், ரவிராஜ், புலேந்திரன், கனடா ரவி, அம்மா ஆகியோருடன் இணைந்து சதிசெய்ததாகவும். 1991 ஏப்ரல் 4 ஆம் திகதிக்கும் ஜூன் 21 ஆம் திகதிக்கும் இடையே வன்செயல்களில் ஈடுபடுவதற்காக வரதனும் ஏனையோரும் வெடிமருந்துகள் வைத்திருப்பது தெரிந்திருந்தும் அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கத் தவறினார் என்றும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# களுத்துறை நீதிமன்றத்தில் தங்கம் பித்தளையாகியது

களுத்துறை நீதிமன்றத்தின் பாதுகாப்பிலிருந்த 1,00,000 ரூபா பெறுமதியான தங்க நகைகள் பித்தளை நகைகளாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1982 இல் பேருவளையில் நடந்த வீட்டுத் திருட்டுகள் தொடர்பாகக் கைப்பற்றப்பட்ட நகைகள் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன இந்த நகைகளே பித்தளை நகைகளாக மாற்றப்பட்டுள்ளன.

நீதிமன்றம் வழக்கின் பின் நகைகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும்படி ஆணை பிறப்பித்திருந்தது ஒப்படைக்கப்பட்ட நகைகள் பித்தளை நகைகள் என்று நகை உரிமையாளர்கள் நீதிமன்றத்துக்குப் புகார் செய்துள்ளனர்.

# யாழ். பல்கலையில் விஞ்ஞானக் கண்காட்சி

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துடன் இணைந்து கல்விப் பொதுத் தராதர சாதாரண உயர்தர விஞ்ஞான பாடத்திட்டத்திற்கு அமைய விஞ்ஞான செய்முறைகள் உபகரணங்கள் மாதிரிகள் ஆகியவற்றைவிளக்குவதற்கான விஞ்ஞானக்கண்காட்சி ஒன்றுநடாத்த உள்ளது.

மேற்படி கண்காட்சி எதிர் வரும் 22-ம், 23-ம் திகதிகளில் 9.00 மணி தொடக்கம் 5.00 மணி வரையும் 24-ம் திகதி 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரையும் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான, மருத்துவ பீடங்களின சகல துறைகளின் ஆய்வு கூடங்களிலும் நடைபெறவுள்ளது.

மாணவர் தொடர்பான நாளையும் நேரத்தையும் முன் கூட்டியே அறிவிக்கும் படியும் பிரவேசகட்டணம் 10ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பரீட்சை நடக்கவில்லை விடைகள் திருத்த ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மூன்று வருடங்களாக நடைபெறாத கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிப் பரீட்சைகள் இவ்வாண்டு மார்ச்சில் ஆரம்பமாகி முழுமையாக நடைபெறாமல் இடைநடுவில் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1989, 1990, 1991-ம் ஆண்டுகளில் நடத்தப்படாமல் பின் போடப்பட்ட பரீட்சைகள் பல போராட்டங்களைத் தொடர்ந்து பின்னர் நடத்தப்பட்டன.

தேசிய தராதர கணக்கீட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வைத்திய வசதியின்றி 2,000 குடும்பங்கள் அவதி

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை மூடப்பட்டிருப்பதனால் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் வைத்திய வசதி இன்றி பாதிப்படைந்துள்ளன.

மாமுனை தொடக்கம் இவ் வைத்தியசாலையை சூழவுள்ள பகுதியில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் உட்பட இரண்டாயிரம் குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றன.

அதேவேளை வடமராட்சி

(4 ஆம் பக்கம் பார்க்க

## இணைப்பு முயற்சி கைவிடப்பட்டது

(மண்டைதீவு)

தீவுப்பகுதியில் வேலணை, ஊர்காவற்துறை உ.அ. அதிபர் பிரிவுகள் இயங்கிக்கொண்டிருப்பதால் அவை யாழ்ப்பாணத்தில் இயங்க முடியாது என்று கூறி அந்த உ.அ. அதிபர் பிரிவுகளை யாழ்ப்பாணப் பிரிவுடன் இணைப்பதற்கு செயலக உயர்அதிகாரிகள் சிலரால் எடுக்கப்பட்ட முயற்சி தீவக இடம் பெயர்ந்துள்ள பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளின் கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது. (88)

# ஆயுதக் கொள்வனவிற்காக பாகிஸ்தானில் கிட்டு

## 'தினமணி'யின் கனவு

விடுதலைப் புலிகளுக்காகப் பாகிஸ்தானிலிருந்து சமீபத்தில் கிட்டு ஆயுதம் கொள்வனவு செய்துள்ளார் என்றும், சமீபத்தில்பாகிஸ்தான்சென்ற அவர், அங்கு ஒருவாரம்தங்கி புலிகள் இயக்கத்திற்கு ஆயுத விநியோகம் சம்பந்தமான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளார் என்றும்தினமணிப் பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது

கிட்டுவின் பாகிஸ்தான் வருகையை அடுத்து விடுதலைப் புலிகளால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட நான்கு கப்பல்கள் கராச்சி துறைமுகத்துக்கு அப்பால் நங்கூரமிடப்பட்டு நின்றன என்றும், பின்னர்போர்த் தளபாடங்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் இலங்கையைநோக்கிப் பயணமாகின என்றும்,

பாகிஸ்தான் ஆயுதப்பேரத்தை முடித்துக்கொண்ட கிட்டு ஏதோ ஒரு ஐரோப்பிய நாட்டுக்குப் புறப்பட்டுச்சென்றார் என்றும், கராச்சியில் கிட்டு பாகிஸ்தான் உளவுத்துறைத் தலைவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார் என்றும் தினமணிப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

## வரி விளம்பரம்


### A/L இரசாயனம்

93 பௌதிக இரசாயனம் ஆரம்பம் 18-07-92 சனி 5 PM ஆசிரியர் சத்தீஸ் 108 பிறவுண் வீதி யாழ்ப்பாணம். (2829)

### விண்ணில் அல்ல விடிவெள்ளி

மீரா வெளியீடு சமூகநாவல் ''கிளிநொச்சிப் பிரதேசத்தின் சாதாரண ஒரு விவசாயக் குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை போர்க்காலப் பின்னணியின் மத்தியில்'' எழுதியிருக்கிறார் பிரபல எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' விற்பனையாகின்றது. (2810)


### தேனீ வளர்ப்பு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேனீ வளர்க்க விரும்புவர்களுக்கு ஆலோசனைகளையும், உபகரணங்களையும் வழங்க தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. தேனீ வளர்ப்புத் தொடர்பான ஆலோசனைகளையும், உபகரணங்களையும் பெற விரும்புவோர் தாவடியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன மையப் பணியகவிவசாயப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 'ஜனசவிய'விற்கு அமைச்சர் நியமனம்

(கொழும்பு)

உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி ஜனசவிய அமைச்சராக நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

தற்போதைய அமைச்சுக்களுடன் ஜனசவிய அமைச்சராகவும் இவர் செயற்படவுள்ளார். இதுவரை காலமும் ஜனசவியத் திட்டம் உணவுக் கூட்டுறவுத் துறை அமைப்பின் கீழ் செயற்பட்டு வந்தது. தற்போது அமைச்சு அந்தஸ்துக்கு அது உயர்த்தப் பட்டுள்ளது. ஜனசவிய அமைச்சு கொள்கை திட்டமிடல் அமைச்சின் கீழ் இனி இயங்கி வரும்.

### நூல் அறிமுக விழா

(பருத்தித்துறை)

யாழ். பல்கலைக் கழக மெய்யியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகநாதன் ஞானக்குமாரனின் ''பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்'' நூல் அறிமுக விழா மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் வைத்

குண்டகசாலை தமிழ் வித்தியாலயத்தில்

## தளபாட கட்டடவசதியில்லை மரத்தின் கீழ் மாணவர்கள்

(மாத்தளை)

குண்டகசாலை தமிழ் வித்தியாலயத்தில் போதிய தளபாட, கட்டட வசதியின்மையினால் அங்குள்ள மாணவர்கள் கல்வி கற்க முடியாத அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இங்கு கல்விபயிலும் மாணவர்கள் பாடசாலை வெளிவளவில் உள்ள மரங்களுக்கு கீழே பாய் விரித்து உட்கார்ந்தே கல்வி பயில்கின்றனர்.

ஆசிரியைக்கு மட்டும் ஒரு மேசையும் கதிரையும் வழங்கப்பட்டுள்ளதாம்.

ஆண்டு பதினொன்று வரை கற்பிக்கப்படும் இப்பாடசாலையில் மொத்தம் பதின்மூன்று பேர் கடமையாற்றுகின்ற போதிலும் இவர்களுக்கும் தண்ணீர், மலசல கூட வசதி எதுவுமே இல்லையாம்.

இப்பாடசாலை அதிபர் விடுதிக்கு மட்டுமே தண்ணீர் வசதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்விடுதியில் இருக்கும் சிங்கள ஆசிரியர் மட்டுமே தண்ணீரை பயன்படுத்தி வருகின்றாராம்.

பிள்ளைகளை பாடசாலைக்கு சேர்க்கும் போது தளபாட வசதிக்கென 100 ரூபா நன்கொடையாக பெற்றுக் கொள்ளப்பட்ட போதும் பிள்ளைகள் பாயில் உட்கார்ந்தே கல்விகற்றுவருகின்றனர்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பதவி வெற்றிடம்**

எழுதுவினைஞர் (அமைய) பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-07-31 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம்:- ரூபா. 79/- நாள் ஒன்றுக்கு (சம்பளத்துடன் மாறும் வாழ்க்கைச்செலவுப் படியும் ஏனைய படிகளும் செலுத்தப்படும்.)

தகைமைகள்:- இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியுடன் ஐந்து பாடங்களில் திறமைச்சித்திகள். திறமைச் சித்திகள் சிங்களம் தமிழ் ஆங்கிலமொழி அல்லது இலக்கியம், எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம்/கணிதம் ஆகியவற்றை உள்ளடக்கல் வேண்டும்.

தெரிவு:- தேர்வும், நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

வயது:-40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு:- ஆங்கிலச் சுருக்கெழுத்தில்/ஆங்கிலத் தட்டச்சடித்தலில்


### பரீட்சைகள்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி கொத்தணி பாடசாலைகளுக்கான பொதுப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 25 ஆம் திகதி வரை நடைபெறுமென உடுப்பிட்டி கொத்தணி அதிபர். திரு. ந. அனந்தராஜ் அறிவித்துள்ளார். (25)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் 1992-08-28 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:-

ரூபா. 5500-10x200; 10x250 - 10000 - (மாதமொன்றுக்கு)

வயது எல்லை;-40வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிக்


## பாதிக்கப்பட்ட ஊழியருக்கு நிவாரணம் வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

1983 ஆம் ஆண்டிற்கும் 1987 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கே நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற புனர்வாழ்வு அமைச்சின் மீளமைப்புக் குழு கூட்டத்திலேயே மேற்படி விடயம் குறித்து ஆராயப்பட்டது. மேற்குறித்த காலப் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி பல்வேறு மாவட்ட அரச அதிபர்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கபபட்டது. பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கு கொள்கை அளவிலேயே சம்மதம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி கூட்டத்தின் பதிவேடுகள் யாழ் செயலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. இக்குறிப்பிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க) (பா)

இணைப்பு பல்கலை கல்லூரிக்கு

## பேயாடிக் கூழாங்குளத்தில் 100 ஏக்கர் காணி

(கொழும்பு)

வடமாகாண இணைப்புப் பல்கலைக் கழக கல்லூரிக்கு என நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக பேயாடி கூழாங்குளம் பகுதியில் நூறு ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இவ் விடத்தை நேரடியாக சென்று பார்வையிட்ட கல்லூரி அதிகாரிகள் செய்த சிபாரிசு கல்லூரி முகாமைத்துவ துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.


## 31 ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 10 — 02 — 1940



ஆண்டவன் மடியில் 18 — 06 — 1992

திருமதி நேசமணி குழந்தையன்

''எமையெல்லாம் பாசமுடன் வளர்த்த
எமதன்பு நேசத்தாயே
உன்னை எண்ணி வாடுகிறோம்
உனதன்பை எண்ணி ஏங்குகிறோம்''

எமது குடும்பத்தின் குல விளக்கே - உன்
ஆத்மா சாந்தியடைய எம் இதயத் தாமரைகளைப்
பாதகாணிக்கை ஆக்குகின்றோம்.

சரஸ்வதி வீதி உங்கள்



## செய்தியாளர்கள் தேவை

'ஈழநாதம்' பத்திரிகைக்குச் செய்தி சேகரிக்கும் பணியில் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சுன்னாகம், மல்லாகம், சாவகச்சேரி, நெல்லியடி, புத்தூர், உரும்பராய், மானிப்பாய், கிளிநொச்சி மற்றும் புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளுக்கே செய்தியாளர்கள் கோரப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் நாளைஞாயிற்றுக்கிழமை (19-7-92) காலை 11-00 மணிக்கு எமது பணிமனையில் நேரில் சந்திக்கவும்.

- பிரதம ஆசிரியர்

## தொடர்பு கொள்ளவும்

பாவித்த சகல விதமான ஆங்கில வீடியோ படக் கசற்றுகள் நியாய விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு:- **நியூ விக்ரேஸ்**
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(2830)


## நினைவு கூருகின்றோம்.

## 1992 - 07 - 18

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். பழைய பூங்கா வீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**அலெக்ஸ் / சின்னக்கண்ணாடி** (வேதரெத்தினம் மொறிஸ் றெஜினோல்ட் - கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.)

**வாசன்** (ஐயம்பிள்ளை மணிவாசகம் - நெடுந்தீவு)

1986 ஆம் ஆண்டு மண்டைதீவு நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு கொல்லன்கலட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**சின்னண்ணா** (சின்னத்துரை காங்கேயன் - கொல்லங்கலட்டி.)

**குஞ்சு / பவான்** (கொல்லங்கலட்டி)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1988 ஆம் ஆண்டு வவுனியா இராசேந்திரம் குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**வைத்தி** (பாலசிங்கம் இராசேந்திரம் - இராசேந்திரன் குளம், வவுனியா.)

பரந்தனில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வல்வை - கம்பர்மலைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - பழுகாமம் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**ஆதவன்** [சொர்ணலிங்கம் சசிகரன்-முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு,]

ஏழாலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். அனுசன்** [சிவராசா சபேஸ்குமார் - சூராவத்தை, சுன்னாகம்.]

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்

காச வித்தியாலயத்தில் வைத்திய கலாநிதி மு. க. முருகானந்தன் தலைமையில் இன்று 18-ம்திகதிநடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா வெளியீட்டுரையை நிகழ்த்துவார். தொழிலதிபர் அ. நாகரத்தினம் (குகன்) ''பாரதி போற்றும் அருளம்பலசுவாமிகள்'' நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ச. சிவலிங்கராஜா, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. வை. கா. சிவப்பிரகாசம் ஆகியோர் ஆய்வுரைகளையும், யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி, யாழ். செயலக பிரதம கணக்காளர் திரு. சு. சிவபாலன் ஆகியோர் சிறப்புரைகளையும் கலாநிதி நா. ஞானக்குமாரன் பதிலுரையும் நிகழ்த்துவார்கள். யாழ்ப்பாணத்துச் சுவாமி சபை செயலாளர் திரு. கி. சிவநேசன் நன்றியுரை வழங்குவார். (25)

## நிர்வாகிகள் தெரிவு

(புங்குடுதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப்' பொதுக்கூட்டம் கடந்த வாரம் மேற்படி பாடசாலை தற்போது இயங்கும் உயர்கலைக் கல்லூரியில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் கை. பேரின்பநாதன் (கொத்தணி அதிபர்), செயலாளர் ந. விஜயசுந்தரம் (பொதுச் சுகாதார பரிசோதகர்), பொருளாளர் திருமதி கமலேஸ்வரி (ஆசிரியை) ஆகியோருடன் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது (22)

கெழுத்தில் / ஆங்கிலத் தட்டச்சடித்தலில் தகுதியுடையவர்களுக்கும் கணக்கியலில் அறிவுடையவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

இப் பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் 23x10 ச, மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

வி[illegible]க்கப்பெற்ற ப[illegible] வங்[illegible]ளில் செய்யப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றிலிருந்துஅனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

– பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-07-14

(சி/4717)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் இப் பல்கலைக்கழகத் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெறவிரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கானவேண்டுகோளுடன் 23x10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ளவிண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத்தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும்கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு;-ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.
ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்;
திருநெல்வேலி,
யாழ்ப்டாணம்.
1992-07-15

(சி/4718)

...பாதுகாக்கை ஆகுகின்றோம்.

சரஸ்வதி வீதி
இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி

உங்கள்
பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

(2794)

அந்தியேட்டி சபிண்டீகரண

# அழைப்பிதழ்

தோற்றம்
03
–
08
–
1920



மறைவு
18
–
06
–
1992

## முருகேசு - செல்லம்மா

அன்புடையீர்,

நிகழும் ஆங்கீரச ஆண்டு ஆனி மாதம் 04ஆந் திகதி (18-06-1992) சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரான திருமதி செல்லம்மா முருகேசு அவர்களின் அந்தியேட்டி - சபிண்டீகரணக் கிரியை இன்று ஆடி மாதம் 03 ஆந்திகதி (18-07-1992) சனிக்கிழமை முற்பகல் சதய நட்சத்திரத்தின் சதுர்த்தித் திதியில், எமதில்லத்தில் நிகழ இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் சமுகந்தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்புத்தாயாரின் ஈமக்கிரியைகளில் கலந்து எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.
16-07-92

மகன்; மு கனகநாயகம் குடும்பம்
மகன்: மு அருமைநாயகம்–குடும்பம்
மகள்; திரு.திருமதி மு சிவஞானம் குடும்பம்

(2745)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா- இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது அப்பகுதி இராணுவத்தினருக்குத் துணையாக வெற்றிலைக்கேணியில் கடல் வழியாகத் தரையிறக்கப்பட்டு முன்னேறிய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ஸ்ராலின்** [செல்வராசா தியாகராசா - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு]

**லெப். நெல்சன்** [கோபாலர் சுந்தரேசன்-கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர், யாழ் ]

**லெப். மிராண்டா** [வீரபுத்திரன் சுரேந்திரன்-பன்குளம், திருக்கோணமலை]

**லெப். கோவிந்தன்** [நடராசா சீத்தாக்குமார் - முடக்கன் தோட்டம், அல்வாய் தெற்கு, யாழ்]

**கஜன் மாமா** [மகேஸ்வரன் சுந்தரராஜா - அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, யாழ்.]

**சீலன்** [குட்டி தெய்வேந்திரம் - எட்டாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு[

**மேகன்** [ஆறுமுகம் அரசரட்ணம் - வெருகல், மூதூர் திருக்கோணமலை]

**பிரான்சீஸ்** [கதிரவேள் குமாரவேள்- துன்னாலை தெற்கு, கரவெட்டி, யாழ் ]

**சைமன்** [சைமன் அந்தோனி யோசப் மைக்கல் பிரதீப் - யாழ்வீதி, மானிப்பாய், யாழ்.]

**குரு** [மாரிமுத்து தயாநிதி - திருநகர், கிளிநொச்சி]

**குரு** [பரராஜசிங்கம் விமலேஸ்வரன் : 7/8, 1-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்.]

**லெப். எனி** [மதிமஞ்சுளா செல்லையா - 115, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்.]

**2-ம் லெப். கோகிலா** [மங்கையர்திலகம்குணநாயகம் - இல. 9, கண்ணகிபுரம், உவர்மலை, திருக்கோணமலை]

**2-ம் லெப். சுரேந்தினி** [அமராவதி பொன்னையா - செந்தூர் வீதி, திரியாய், திருக்கோணமலை]

**டிலா** [செபத்தியம்மா (ஆனந்தி) நீக்கிலாப்பிள்ளை- பரியாரி கண்டல், முருங்கன், மன்னார்]

**2-ம் லெப். இலக்கியன்** [கதிர்காமு ரவீந்திரராசா - அரியாலை கிழக்கு, யாழ்.]

**தினேஷ்** [வேதநாயகம் திவாகரன் - இல. 34, வதனீஸ்வரி வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி]

**கப்டன் விஜிதா விஜி** [சிவராஜினி சின்னப்பு - செல்வபுரம், உரும்பிராய் தெற்கு, யாழ்.]

**நவீனன்** [திருலோகசிங்கம் அன்பழகன் (அன்பு) - கனகசபைத் தோட்டம், கீரிமலை வீதி, காங்கேசன்துறை, யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4616)

### சிந்தனைக்கு

மண்ணில் மனிதனுக்கு மனிதன் செய்யும் கொடுமை, எண்ணற்ற ஆயிரம் பேர் ஏங்கி அழச் செய்யும்,

— ராபர்ட் பர்ன்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## பதுக்கல் வியாபாரம் ஒரு தேசவிரோத செயல்

பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபட்ட நூற்றிற்கும் மேற்பட்ட வியாபாரிகள் தமிழீழக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பதுக்கல் பொருள்களை நியாயமான விலையில் மக்களுக்கு விநியோகித்தும் வருகின்றனர்.

பதுக்கல் வியாபாரிகளை காவல்துறையினர் கைது செய்யும் நடவடிக்கையை ஆரம்பிக்கும் முன்னர், பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என வியாபாரிகளிடம் பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், ''போர் காலச்சூழ் நிலையைச் சாட்டாக வைத்து கொள்ளை லாபம் பெறும் நோக்கத்துடன் பொருள்களைப் பதுக்குவது, சமூக விரோதச் செயலாகவே கருதப்படும். இவ்வாறு பொருள்களைப் பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' எனவும் இது குறித்து எச்சரிக்கையும் செய்திருந்தார்.

ஆனால், இந்த வேண்டுகோள்களையும், எச்சரிக்கைகளையும் பெரும்பாலான வியாபாரிகள் அசட்டை செய்தே வந்தனர். சமூகவிரோதச் செயல் என எச்சரிக்கை செய்த பின்னரும், பொருள்களைப் பதுக்குவதிலும், அதன் மூலம் கொள்ளை லாபம் அடைவதிலுமே அக்கறைகாட்டினர். இதன் காரணமாக சந்தையில் தாராளமாகக் காணப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் பல மாயமாக மறைந்தன.

இதேபோன்று கடந்த காலப் பகுதியிலும், நெருக்கடியான காலகட்டத்தில் பதுக்கல் வியாபாரம் செய்ய வேண்டாம் என பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டதுண்டு. ஆனால், வியாபாரிகள் அவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை. இதனால், மக்கள் பெரும் நெருக்கடிக்கும், தொல்லைக்கும் உள்ளானார்கள்.

இதேவேளை, வியாபாரிகளிடம், பொருள்களை [illegible]

# ஹிட்லர், ஈவாவின் உடல்கள் மீண்டும் தேடப்படுகின்றன

ஜெர்மனியின் முன்னாள் ஜனாதிபதி 'சர்வாதிகாரி ஹிட்லர் அவரது மனைவி ஈவா பிரான் ஆகியோரின் எரிந்த உடல்களைத் தாங்கள் புதைத்ததாகக் கூறும் முன்னாள் சோவியத் உளவாளிகள் இருவர் கிழக்கு ஜேர்மன் நகரான மெக்டபேர்க்கில் இப்போது அவற்றைத் தேடி வருவதாகவும் ஸ்பீஜ், டெலிவிஷன் அறிவித்தது.

ஹிட்லரை உயிருடன் பிடிக்க அமர்த்தப்பட்ட விசேட யூனிட்டைச் சேர்ந்த இவான் டெரவு கெங்கோ, இவான் பிளாஷ்சுக் ஆகிய இருவருமே இப்போது அவற்றைத் தேடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிட்லர், ஈவா பிரான் ஆகியோரின் உடல்கள் இருமுறை பிரேத பரிசோதனை செய்யப்பட்டது என்றும் குறைந்தது மூன்றுமுறை புதைக்கப்பட்டது என்றும் அந்த இரு உளவாளிகளும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் ஹிட்லரின் உடல் மெக்டெபேர்க்கில் நிச்சயம் இருப்பதாகவும் அவர்கள் இருவரும் கூறுகின்றனர்.

★ ★ ★

ரஷ்யத் துருப்புக்கள் ஜேர்மனியை அண்மித்த நிலையில் 1945 ஆம் ஆண்டு, ஏப்ரல் 30ம் திகதி ஹிட்லரும் ஈவா பிரானும் தற்கொலை செய்து கொண்டனர்.

வெற்றிப் பிரவேசம் செய்த சோவியத் துருப்புக்கள் ஹிட்லரின் பாதுகாப்பு அரணில் குப்பைகளை அகற்றியபோது குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட குழி ஒன்றில் எரிந்த நிலையில் இரு உடல்களையும் கண்டனர். சோவியத் தலைவர் ஜோஸப் ஸ்டாலின் இந்த உடல்களைப் பார்வையிட்டு வருமாறு தனது உளவுத் தலைவர் லவ்ரென்டி பெரியா, வெளிநாட்டமைச்சர் மொலட்டோவ் ஆகியோரை இரகசியமாக அனுப்பி இருந்தார் என்றும் தெரிவிக்கபட்டது.

இரு சிதைந்த உடல்களும் வெடிமருந்துப் பெட்டி ஒன்றில் அடைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக பெர்லின் சுற்றுப்புறத்தில் புச் என்ற இடத்தில் உள்ள சோவியத் போர்முனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டன. இப்பிணங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டன. கே. ஜி. பி. உளவு அறிக்கையின் படி ஹிட்லர் சயனைட் அருந்தியே தற்கொலை செய்து கொண்டார் என கூறப்பட்டுள்ளது. இது வரை கூறப்பட்டதுபோல் அவர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு இறக்கவில்லை.

1945ஆம்ஆண்டு யூலைமாத ஆரம்பத்தில் ஹிட்லரின்உடல்களை புச் என்ற இடத்தில் புதைத்தனர். ஆனால் புதைகுழித் திருடர்கள் அங்கு பிடிபட்டதால் ஹிட்லர் ஈவா பிரான் உடல்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு வடக்கே ஸ்டென்டால் என்றஇடத்தில் புதைக்கப்பட்டன. இதன் பின் இரண்டாவது பிரேதப்பரிசோதனையொன்றுக்கு உத்தரவிடப்பட்டது.

இரண்டாவது பிரேத பரிசோதனைக்குப்பின் அடையாளங்கள் ஊர்ஜிதம் செய்யப்பட்டு மெக்ட பேர்க்கில் மீண்டும் புதைக்கப்பட்டது.

இரண்டாவது உலக மகா யுத்த இறுதியில் மாஸ்கோவின் உத்தியோக பூர்வ ரீதியான நிலை குழப்பகரமாக இருந்தது. ஹிட்லரின் உடல் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் பல்வரிசையைக்கொண்டு அது அடையாளம் காணப்பட்டதாகவும் சில சோவியத் அதிகாரிகள் கூறினர். வேறு சில அதிகாரிகள் இதை மறுத்தனர்.

பிரித்தானியா ஜேர்மனியிலுள்ள தனது ஆக்கிரமிப்பு பகுதியில் ஹிட்லரின் உடலை மறைத்து வைத்திருப்பதாய் சில சோவியத் அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர். இதரவதந்திகள் ஹிட்லர் தப்பியோட முயன்ற போது ஜேர்மனிய அதிகாரிகளால் சுடப்பட்டார் எனக் கூறின.

★ ★ ★

இத்தகையதோர் ஐயப்பாடான கருத்துக்கள் நிலவும் வேளையில் மீண்டும் சோவியத் உளவாளிகள் அவர்களின் உடல்களை கிழக்கு ஜேர்மன் நகரான மெக்ட பேர்க்கில் தேடி வருகின்றனர் என ஸ்பீஜல் டெலிவிஷன் அறிவித்துள்ளது.

நன்றி: விரகேசரி-

# ஈராக் மீது இராணுவ நடவடிக்கை; புஷ் நிர்வாகம் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கிலுள்ள அணுஆயுதங்கள் தொடர்பான ஆவணங்களை ஆராய ஐ.நா சபையின் கண்காணிப்பு அதிகாரிகளுக்கு ஈராக் தொடர்ந்து அனுமதி அளிக்க மறுத்தால் ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று புஷ் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்த எச்சரிக்கையை வாஷிங்டனில் நேற்றுமுன் தினம் வெள்ளை மாளிகைஅதிகாரிகள் விடுத்தனர்.

இத்தகைய ராணுவ நடவடிக்கைக்கான வாய்ப்புக் குறித்து பிரித்தானியாவுடனும், பிரான்சுடனும் விவாதங்களை அமெரிக்க தொடக்கியுள்ளது என்றும் வாஷிங்டனில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டோர்மீது நடவடிக்கை

- மன் மோகன் சிங் அறிவிப்பு

[டில்லி]

அரச பத்திரங்கள் ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் அரசாங்கம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியாவின் நிதியமைச்சர் மன் மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

லோக் சபாவில் உரையாற்றிய மன் மோகன் சிங் மேலும் குறிப்பிடுகையில்;

எதையும் அரசு மறைக்கவில்லை [illegible]

நடப்புப் பிரச்சினைகளுக்கு எல்லாக் கட்சிகளுமே காரணம் என்றும், குற்றம் சுமத்துவதற்குப் பதிலாகக் கூட்டு முயற்சியினால் சரியான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பாப்பரசரின் குடலுக்குள் தோடம்பழஅளவிலான கட்டி

(ரோம்)

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பருக்குப் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட நான்கு மணி நேர சத்திர சிகிச்சைக்குப் பின்னர் ஒரு தோடம்பழ அளவிலான கட்டி அவரது குடலில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சையின் பின்னர் அன்றைய தினம் இரவே அவர் அமைதியாகக் கழித்தார் என்றும் ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இஸ்ரேல் பிரதமர் ராபினுக்கு ஜோர்ஜ் புஷ் அழைப்பு

(வாஷிங்டன்)

விடுத்துள்ளார். அடுத்த மாதக் [illegible]

இந்திய - திபேத்திய எல்லை

## பொலிஸ் படை மசோதா சபாவில் நிறைவேறியது

(டில்லி)

இந்தியாவின் வடகிழக்கு எல்லையின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் ஆயுதப் படை ஒன்றை அமைத்து முறைப்படுத்த இந்திய - திபெத்திய எல்லைப் பொலிஸ் படை மசோதா - 1992 என்ற மசோதாவை ராஜ்ய சபா ஏற்றுக் கொண்டுள்ளது.

தேர்வுக் கமிட்டியிடம் இதைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற எதிர்த்தரப்பினர் கூறிய திருத்தம் உறுப்பினர்களால் விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து மசோதா ராஜ்ய சபாவில் நிறைவேறியது.

## தென் ஆபிரிக்காவிற்குள் ஐ. நா. பிரதிநிதிக்கு அனுமதி

(நியூயோர்க்)

தென் ஆபிரிக்காவில் உண்மைத் தகவலறியும் பொருட்டு சிறப்பு பிரதிநிதி ஒருவரை அங்கு அனுப்பும் நடவடிக்கைக்கு ஐ. நா, பாதுகாப்புச் சபை ஒரு மனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

தென் ஆபிரிக்காவில், வன்முறை பற்றி விவாதிப்பதற்காக கூடிய சபையின் சிறப்புக் கூட்டத்தில் தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக். போத்தா அரசாங்கத்துடனானபேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கும்படி ஆபிரிக்க தேசியக் காங்கிரசை வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

வன்முறை எழுந்திருக்கக் [illegible] காணிப்பு அமைப்பு ஒன்று உருவாக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் தென் ஆபிரிக்காவில் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு சிறப்புத் தூதர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறும் தீர்மான வாசகம் ஒன்றை ஆபிரிக்க நாடுகள் கொண்டு வந்திருக்கின்றன.

வன்முறையைக் கண்டிப்பதுடன் ஜனநாயக ரீதியிலான இனப்பாகுபாடற்ற நாடாக தென் ஆபிரிக்கா மாறுவதற்கு வகை செய்யும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க ஐ. நா. பாதுகாப்புச்

களை கொழும்புவிலையிலோ, அன்றி வவுனியா விலையிலோ அன்றி கிளிநொச்சி விலையிலோ விற்குமாறு காவல்துறையினர் கோரவில்லை. கொம்படி - ஊரியான்பாதை மூடப்படும் வரை இருந்த சந்தை விலையில் விற்குமாறே கோரப்பட்டது. இக்கோரிக்கையில், தவறு ஏதுமில்லை. வியாபாரிகள் நட்டமடையவும் வாய்ப்பேதுவுமில்லை மாறாக மக்களுக்கு அன்றாடம் பொருள்கள் சிரமமின்றிக் கிடைக்கவும், வியாபாரிகள் மீது மக்களின் நல்லெண்ணம் வளரவுமே வாய்ப்பு இருந்தது.

கடந்த சிலவருடங்களாக யுத்தத்தின் காரணமாக மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றார்கள். குடாநாட்டில் மட்டும் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வரையில் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் பொருளாதார நடவடிக்கை முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. வருமானம் என்பது எதுவுமில்லை. இந்நிலையில்அன்றாட வாழ்க்கையையே நடத்த முடியாது பெரும் கஷ்டத்தின் மத்தியில் அவர்கள் வாழ்க்கை நடைபெறுகின்றது.

ஆனால் பதுக்கல் வியாபாரிகள் இதில் எவற்றையும் கருத்திற் கொள்வதாக இல்லை. தமது தேசம், தமது இனம், தமது உடன்பிறப்புக்கள் என்பன அவர்களின் கண்களுக்குத் தெரிவதாக இல்லை. அவர்கள் நோக்கம் யாவும் நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி கொள்ளை லாபம் ஈட்டுவதாகவே உள்ளது.

இந்நிலையில் கடந்த கால அவதானிப்புக்களையும் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் நிலமைகளையும் கருத்திற் கொண்டு தமிழீழக் காவல்துறையினர் இந்நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். பதுக்கலுக்கு எதிராக காவல்துறையினர் எடுத்த காலப் பொருத்தமான இந்நடவடிக்கை மக்களின்குறைதீர்க்கச்சாலப்பொருத்தமானதாகும்.

பொதுவாகவே யுத்த காலத்தில் பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் மிக உயர்வானதாகும். சில நாடுகளில் பதுக்கல்களுக்கான தண்டனைமரண தண்டனை வரை அமைந்ததுண்டு. இந்நிலையில் பதுக்கலுக்கெதிராக தமிழீழக் காவல்துறையினர் எடுத்துவரும் நடவடிக்கைகள் மென்மையானவை என்றும். மனித நேயத்துடன் மேற்கொள்ளப்படுபவை என்றும் கூறலாம்.

எதையும் அரசு மறைக்கவில்லை என்றும், இதனால் தான் கூட்டுப் பாராளுமன்ற நிர்வாகக் குழுவின் விசாரணைக்கு அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

(வாஷிங்டன்)

மெய்னிலுள்ள விடுமுறைக் காலத்தில் தன்னைச் சந்திக்குமாறு இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ராபினுக்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ்அழைப்பு விடுத்துள்ளார். அடுத்த மாதத்தில் இச்சந்திப்புநிகழலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே வெளிவிவகாரச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கரை மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி புஷ் தூண்டுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜோர்ஜ் புஷ் இஸ்ரேலிய பிரதமருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரடியாக அழைப்பை விடுத்தாரென வெள்ளை மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன

## 500கோடி ஆண்டுகளின்பின் ஒரு நாளில் 27 மணி நேரம்

கடந்த முதலாம் திகதி முதல் உலகெங்கிலுமுள்ள கடிகாரங்களில் ஒரு விநாடி நேரம் கூட்டி வைக்கப்பட்டது. பூமியின் சுழற்சியில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்கு காரணமாகியது.

பூமியின் சுழற்சி வேகம் படிப்படியாக குறைந்து வருகிறது. இப்போதெல்லாம் ஒரு நாட்பொழுது கழிய 24 மணி நேரமே செல்கிறது. 500 கோடி ஆண்டுகளின் பின் ஒரு நாட்பொழுது கழிய 27 மணித்தியாலம் எடுக்கும்.

உலகெங்கிலுமுள்ள கடிகாரங்களில் ஒரு விநாடி நேரம் கூட்டி வைககப்பட்ட தகவல் அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகர தேசிய காலநேர அளவீட்டு ஆய்வு கூடத்தின் வாயிலாக வெளியிடப்பட்டிருக்கிறது.

பாரிஸ் வானியல் அவதான நிலையத்தின் சர்வதேச பூமி சுழற்சிச் சேவைப் பிரிவின் பணிப்புரைக்கமைய உலகம் முழுவதிலுமுள்ள விஞ்ஞானிகள் மற்றும் நேர மதிப்பீட்டாளர்கள் நேரத்தை உரியபடி காட்டும் அணு சக்தி கடிகாரங்களில் ஒரு விநாடி நேரத்தைக் கூட்டி வைத்தனர்.

மூன்று லட்சம் ஆண்டுகளின் பின்னரேயே இரு அணு சக்திக் கடிகாரங்களிடையே ஒரு விநாடி நேரம் வித்தியாசப்படும்.

விஞ்ஞானிகளின் மதிப்பீட்டின்படி 450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே பூமியின் சுழற்சி வேகம் குறைந்து வந்திருக்கிறது. 85 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாட்பொழுது கழிய 20 மணி நேரமே எடுத்தது.

போகப் போக பூமியின் சுழற்சி வேகம் குறைவதால் கோடிக்கணக்கான ஆண்டுகளில் 24 மணி நேரமென்ற ஒரு நாட்பொழுது 27 மணி நேரமாக மாறிவிடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இப்படியான ஒரு மாற்றம் ஏற்பட கோடிக்கணக்கான ஆண்டுகள் எடுப்பதால் அதைப்பற்றி நாம் சிந்திப்பதால் பயனில்லையென அவுஸ்திரேலியாவில் கன்பரா தலைநகர தேசிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கேர்ட்லம்பேர்க் தெரிவித்தார்.

பாரிய தொலைத் தொடர்புச்சேவைகள், விண்வெளி நடவடிக்கைகள், தொலைக்காட்சி சமிக்கைகள், மற்றும் அணுசக்தி தொடர்பான நடவடிக்கைகளின் போது நேரங்கள்மாற்றமெதுவுமின்றி உரியபடி இருத்தல் அவசியமாகிறது. அணுசக்தி கடிகாரங்கள் இந்தப் பணியை வெற்றிகரமாகச் செய்கின்றன. ஒரு விநாடி நேர மாற்றத்தைக் கூட அவைகாட்டுகின்றன.

## கட்டடம் இடிந்து 35பேர் பலி

(டில்லி)

இந்தியாவில் ஹிமாலயப் பிரதேசத்தின் தலைநகர் சிம்லாவில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் கட்டடம் இடிந்து விழுந்ததில் 35 பேர் உயிரிழந்தனர். மற்றும் 45 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்டட விபத்துக்கான காரணம் உடனடியாக அறியப்படவில்லை.

## தனிப்பட்டவர்களின் செய்திக்குத் தடை

(லண்டன்)

மக்களின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் அதிகளவில் நாட்டம் காட்ட தலைப்பட்டால் பத்திரிகைச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படும் என பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனைக்கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வரப்படுமென பிரிட்டிஷ் அரசு தெரிவித்திருக்கிறது.

இளவரசர் சாள்ஸ்டயானா விவகாரங்களை அதிகளவில் பத்திரிகைகள் வெளியிட்டதை அடுத்தே அரசு இவ்வாறு அறிவித்துள்ளது

வன்முறை எழுந்திருக்கக் காரணமாக இருந்த பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கும் வகையில் கூட்டு கண் சபை உதவி புரிய வேண்டும் என்றும் அந்தத் தீர்மானம் தெரிவிக்கிறது.

## ஷாமிர் - ராபினுக்கிடையே வேறுபாடு எதுவுமில்லை.

- யாசிர் அரபாத்

(கெய்ரோ)

இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் யிட்சாக் ஷாமிருக்கும், பிரதமர் பொறுப்பை தற்போது ஏற்றிருக்கும் ராபினுக்கும் இடையில் எதுவித வித்தியாசத்தையும் காண முடியவில்லை என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசிர் அரபாத் கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; ராபின் மத்திய கிழக்கு சமாதான முயற்சி சம்பந்தமான தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பதாகவும், தேர்தலுக்கு முன்னர் கூறியதைப் போல அல்லாமல் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்கு இஸ்ரேலில் சர்வசன வாக்கெடுப்பு அவசியம் என்றுகுறிப்பிட்டது, நம்பிக்கையை இழக்க வைப்பதாகவும் தெரிவித்தார்.

உலகக் கிண்ண கிரிக்கட்

## இறுதித் தொடர் போட்டி இந்தியாவில் நடைபெறும்?

(டில்லி)

உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகளின் அடுத்த இறுதித் தொடரை இந்தியாவில் நடத்த இந்திய கிரிக்கட் சபை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

1987ம் ஆண்டிலும், உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளை இந்தியாவும், பாகிஸ்தானும் கூட்டாக நடத்தியது தெரிந்ததே.

ஒன்பது நாடுகளின் அணிகளே இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது பன்னிரண்டு நாடுகள், போட்டியில் பங்கு பெறுவதால் இறுதிப் போட்டிகளை நடத்த புதிய அழைப்பு விடுக்கப்படுவதாக சர்வதேச கிரிக்கட்சபை அறிவித்துள்ளது.

1993 ஜனவரியில் இது சம்பந்தமாக முடிவு செய்யப்பட்டு 1995ம் ஆண்டு, 1996ம் ஆண்டு இச்சுற்றுப் போட்டி நடத்தப்படும்.

## பிலிப்பைன்ஸில் எரிமலை வெடிப்பு

பிலிப்பைன்சில் மொன்ட் தினதூபோ எரிமலை வெடித்தமையால் முப்பது கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்திற்குச் சாம்பலும், எரிமலைக் குழம்பும் பரவுவதாகச் சொல்லப்படுகிறது.

## தேர்தல் அறிவிப்பு

(டில்லி)

இந்திய உப ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் பற்றி தேர்தல் ஆணையகம் அறிவிப்பு செய்துள்ளது. இம்மாதம் முப்பத்தோராம் திகதி பிற்பகல் மூன்று மணிவரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# பாக்கி செலுத்தாததால் உணவுப் பங்கீடு நிறுத்தம்

கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய பணத்தை கல்வித்திணைக்களம் செலுத தத் தவறியதால் அப்புத் தளைப் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு உணவுப் பங் கீடு நிறுத்தப்பட்டுள்ளது.

அப்புத்தளை நகரில் இயங் கும் கூட்டுறவு சங்கக் கடை யிலேயே இப்பகுதியிலுள்ள அநேக பாடசாலைகளின் மாணவர்கள் மதிய உணவுக் கான பொருள்களை வாங்கிக் கொள்கின்றனர்.

இக் கடைக்குச் செலுத்த வேண்டிய பல இலட்ச ரூபா பாக்கியை கல்வித் திணைக் களம் செலுத்த தவறியதனா லேயே பாடசாலைப்பிள்ளை கள் உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## ஆண்டு பொதுக்கூட்டம்

(நல்லூர்)

சுன்னாகம் ஸ்கந்தவரோத யக் கல்லூரி பழைய மாண வர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் தலைமையில் கல் லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இவ்வாறு பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆ. மகாலிங்கத்தின் செய்திக்குறிப் பொன்று தெரிவிக்கின்றது.


## சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## மஹோற்சவ விழா அழைப்பு

அன்புடையீர்!

கீழ்வரும் கால அட்டவணைப்படி மேற்படி ஆலய மஹோற்சவவிழா நடைபெறவுள்ளது.

கொடியேற்றம்: ஆடி 5-ம் நாள் (20-07-92) திங்கள் மு.ப 10.00 மணி

சித்திரத்தேர்: ஆடி 13-ம் நாள் (28-07-92) செவ்வாய் மு.ப 10.00 மணி

தீர்த்தத்திருவிழா: ஆடி 14-ம் நாள் (29-07-92) புதன் மு.ப. 9.00 மணி

பூங்காவனம்: ஆடி 15-ம் நாள் (30-07-92) வியாழன் பி.ப 4.00 மணி

ஆடிப்பூரத்திருவிளக்குப் பூஜை (சுமங்கலி பூஜை): ஆடி 17-ம் நாள் (1-8-92) சனி பி.ப. 3.00 மணி

குறிப்பு: மஹோற்சவம் பத்து நாட்களும் விரதம் அனுட்டிப்போரும், ஆடிப்பூரம் சுமங்கலி பூஜையில் (திருவிளக்கு) பங்குகொள்வோரும் முன்கூட்டியே பெயர்களை பதிவு செய்யவும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!


## தங்கம் கடத்தல் கண்டுபிடிப்பு

சிங்கப்பூரில் இருந்து அனு ப்பி வைக்கப்பட்டுள்ள ஜவுளிப் பார்சல் ஒன்றுக்குள் 26லட்சம் ரூபாய் பெறுமதியான நாற் பது தங்க பிஸ்கட்டுகள் ஒளி த்து வைக்கப்பட்டிருந்ததை தபாற் சந்தோர் கடல் விமா னப் பார்சல் பிரிவில் கடமை யாற்றும் சுங்க அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மகோற்சவம்

ஊரெழு- கிழானைப்பதி பர்வத வர்த்தினி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோ ற்சவம் 21- 7- 92ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடி யேற்ற வைபவத்துடன்ஆரம்ப மாகி வரும் 31- 7- 92இல் தேர்த்திருவிழாவும் 1- 8- 92 இல் தீர்த்த திருவிழாவும் மறு நாள் பூங்காவனத்துடன் உற் சவம் நிறைவுற உள்ளதாக மேற்படி ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வருடாந்த மகோற்ச வம் 23.7.92 வியாழன் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 31.7.92 வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 1.8.92 சனிக்கிழமை தீர்த்தத்திரு விழாவும் மறுநாள் பூங்காவன த்திருவிழாவுடன் உற்சவம் பூர்த்தியுறும்.

# ஓமான் தொழிற்சாலையில் இலங்கையர்வேலைநிறுத்தம்

(கொழும்பு)

ஓமானில்ஆடைத் தொழிற் சாலை ஒன்றில் வேலை பார் க்கும் சுமார் ஆயிரம் இலங் கைப் பெண் தொழிலாளர் கள் வேலை நிறுத்தம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேரக்கொடுப்பனவு கள் வழங்கப்படாமை குறி த்தே இவர்கள் ஜூலை முத லாம் திகதி முதல் வேலை நிறு த்தம் செய்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய் திகள் தெரிவிக்கின்றன.

காலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை இவர்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஒரு முகவர் ஆறு மாதங்களு க்கு முன்பு இந்தப் பெண்களை ஓமானுக்கு அனுப்பியதாகத் தெரியவருகிறது.

இலங்கையர்களான

# வெளிநாட்டில் வாழ்வோர் கடவுச்சீட்டுப் பெற வசதி

(கொழும்பு)

வெளி நாடுகளில் வாழும் இலங்கையர்கள்தம்து பயணத் தஸ்தாவேஜுப் பத்திரங்களை எவ்வித தாமதங்களுமின்றி அவரவர்கள் வாழும் நாட்டி லேயே இப்போது பெற்றுக் கொள்ள முடியுமென்று குடி வரவு குடியகலவு அதிகாரிகள் கூறியுள்ளனர். சுமார் பத்து இலட்சம் இலங்கையர் இப் போது வெளிநாடுகளில் வாழ் கிறார்கள்.

இதுவரை காலமும் வெளி நாட்டில் வாழும் இலங்கையர் கள் புதியகடவுச்சீட்டுப் பெறு வதற்கு அல்லது புதுப்பிப்பத ற்கு விண்ணப்பித்தால் கொழு ம்புடன் தொடர்பு கொண்டு பத்துவருடகாலப்பதிவுகள் பரி சீலிக்கப்பட்ட பின்னரே அவை வழங்கப்படும்முறைஇருந்தது.

ஆனால் இதற்குப் பதிலாக இப்போது வெளிநாட்டில்கட வுச்சீட்டு கோரும் ஒருவரை விசாரணை செய்யும் வெளி விவகார அமைச்சு அதிகாரி சம்பந்தப்பட்ட நபர்அளிக்கு தகவல்கள் உண்மை என்று உறுதிப்படுத்தினால் கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

இதன்மூலம்வெளிநாடுகளில் வாழ்வோர் கடவுச் சீட்டுக்க ளைப்பெறுவது இலகுவான தாக்கப்பட்டுள்ளது.

# ஜனசக்தி திட்டம் முதலாவது சுற்று பூர்த்தி

(கொழும்பு)

ஜனசக்தித்திட்டத்தின் முத லாவது சுற்றை பூர்த்தி செய் துள்ள 1,25,000 குடும்பங்க ளில் இடப்பட்டுள்ள 25,000 ரூபாவிற்கான பாஸ்புத்தகங் களும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி தவறான குற்றச்சாட்டில் கைது

## -தி மு. க. தலைவர் கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

முன்னாள் அமைச்சர் சுப்பு லட்சுமி அவரது கணவன் ஜெகதீசன் மற்றும் வை. கோபாலசாமியின் தம்பி ரவிச் சந்திரன் ஆகியோர் தவறான குற்றச் சாட்டுகளின் அடிப் படையில் தடா சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டுள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தவறான தோற்றத்தை ஏற் படுத்த இவ்வாறு செய்யப்பட் டுள்ளது என்று தி.மு.க. தலை வர் மு. கருணாநிதி சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறி யிருக்கிறார்.

அரசின் உத்தரவு சிறையில் உள்ளவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது அரசின் உத்தரவு சட்ட விரோதமானது இது ரத்துச் செய்யப்படவேண்டும். இதன் அமுலாக்கத்துக்கு இடைக்காலத் தடை உத்த ரவு பிறப்பிக்க வேண்டும் என்று அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு வந்ததும் தடா சட்டத்தின் கீழ் கைது செய்திருப்பவர் களைச் சிறையில் பார்வையி டக் கருணாநிதிக்கு உயர் நீதி மன்றம் அனுமதி வழங்கியுள் ளது.

# திருநாவுக்கரசின் கூட்டத்தில் அ. தி. மு. க. வினர் ரகளை

(சென்னை)

ராஜபாளையத்தில் தான் பேசவிருந்த பொதுக்கூட்டத் தில் அ. தி. மு. காவைச் சேர்ந்த சிலர் கலவரம் செய்து அங்கிருந்த ஒலிபெருக்கி, ஜெனரேட்டர் ஆகியவைக ளைச் சேதப்படுத்திக் கற்கள் சோடாப் போத்தல் ஆகிய வற்றை வீசியுள்ளனர். என்று எம். ஜி. ஆர். அ. தி. மு. தலைவர் திருநாவுக்கரசு கூறி னார்.

ஜெயலலிதா ஆட்சியில் மாற்றுக்கட்சியினரின் பொதுக் கூட்டங்களை இவ்வாறு குழப் புவது அதிகரித்து விட்டது. ஆளும் கட்சியினர் இவ்வாறு சட்டத்துக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடுகிறார் கள் என்று கூறிய அவர், முத லமைச்சர் ஜெயலலிதாவும் இதனை அனுமதிக்கிறார் என்றார். இப்படிச் சட்டத் துக்குப் புறம்பான காரியங்க ளில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸாரும் நடவடிக்கை எடுப்பதில்லை என்று திருநா வுக்கரசு கூறினார்.

# திலீபன் ஞாபகார்த்த தடகள விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினை வுக் கேடயத்திற்கான மாவீரர் தடகள விழா இவ் வருடம் மாவட்ட மட்டத்தில் மட்டும் நடத்தப்படும் என்று தெரிய வருகிறது. செப்டம்பர் மாதம் 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நடத்த உத்தேசிக் கப்பட்டுள்ள இவ் விழாவிற் கான விண்ணப்பங்கள் யாவும் ஆகஸ்ட் பத்தாம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.

கடந்த வருடத்தில் இப் போட்டிகள் வட்டவை மட் டத்தில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்கள் மாவட் டப் போட்டிகளில் பங்கேற் றமை தெரிந்ததே. விண்ணப் பப்படிவங்கள் பெற்றுக்கொள் ளும் இடங்கள் பற்றி பின் னர் அறியத்தரப்படும் என்று யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டி

(புங்குடுதீவு)

மேஜர் முரளி ஞாபகார்த்த மாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க தீவகப் பிரி வினரால் வேலணை கல்விக் கோட்ட மட்டத்தில் நடாத் தப்படும் விளையாட்டுப் போட்டியில் இன்று (சனிக் கிழமை) சைக்கிள் ஓட்டம், மரதன்ஓட்டம் ஆகிய நிகழ்ச்சி கள் நடைபெறுகின்றன. காலை 6-30 மணியளவில் சண்டிலிப்பாயில் ஆரம்பமா கும் சைக்கிள் ஓட்டமும், பீச் றோட் லெப் - கேணல் விக்ரர் அவர்களின் சிலையடியில் ஆரம்பமாகும் மரதன் ஓட்ட மும் விடுதலைப்புலிகள் மாண வர் இயக்க தீவகப்பிரிவுச் செயலகத்தில் முடிவடையும். (22)

# மாவீரர்களுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(குருநகர்)

கடந்த 15ஆம் திகதி மண லாறு மாவட்டத்தில் வெடி விபத்தொன்றில் வீரச்சாவ டைந்த குருநகரைச் சேர்ந்த இரண்டாவது லெப்டினன்ட் வெற்றிகொண்டான் (நவசிங் கம் செபஸ்தியாம்பிள்ளை கஸ்ரன் பேனாட்டின்) புகழு டல் நேற்றுக் காலை ஜீவன் வீதியிலுள்ள அவரது இல்லத் தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இவருடன் இதே சம்ப வத்தில் வீரச்சாவடைந்த வீரவேங்கை (முருகவேள்) தங்கலிங்கம் கோணேஸ்வரன் இணுவில் ஆகிய இருவரது புகழுடல்களும் பிற்பகல் 1.30 மணிவரை குருநகர் சனசமூக நிலைய முன்றலில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக் கப்பட்டிருந்தது.

மக்கள் அஞ்சலிக்காக வைக் கப்பட்டிருந்த இடங்களில் மக் கள் பெருந்திரளாகச் சென்று தமது இறுதி அஞ்சலிகளை

# வெளிவாரி பட்டப்படிப்பு செப்டெம்பரில் பரீட்சை

யாழ் பல்கலைக்கழக வெளி வாரி மாணவர்களுக்கான முதலாம் ஆண்டுப் பரீட்சை செப்டெம்பர் மாத நடுப்பகு தியில் ஆரம்பமாக உள்ளது.

மேற்படி பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவு மேற் கொண்டு வருகிறது. இப்பரீட் சைக்கான அனுமதி அட்டை [illegible] தற்கு வேண்டிய நடவடிக்கை களும் எடுக்கப்பட்டிருக்கிறது. மிக விரைவில் பரீட்சார்த்தி களுக்கு இவை அனுப்பிவைக் கப்பட உள்ளதாக வெளிவாரிப் பட்டப் படிப்பு இணைப்பா ளர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார். (க)(ச

## காசுத்தாள் கடத்தல்

(கொழும்பு)

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா
(ஆலய தர்மகர்த்தா)

பிரசுர அன்பளிப்பு
P.S. பத்மநாதன் குடும்பம்
(நோர்வே)

''பத்மபதி''
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(2785)

# ஓராண்டு நினைவஞ்சலி

வீரவேங்கை

## லெப்டினன்ட் நெல்சன்

(கோபாலர் சுந்தரேசன்)

கருகம்பனை

தாய் மடியில்
25.11.1971

தமிழீழ விடிவில்
18.07.1991

கோர வஞ்சகர் கொடுமை அறுக்க தீரத்துடன்
சென்றனை களம்
கோட்டையை மீட்டு நாட்டைக் காத்திடும் சமரில்
ஏற்றிட்ட காயம் ஆறுமுன் விரைந்தாய்
வெற்றிலைக்கேணிக்கு
புரிந்தாய் சாதனை சரிந்தாய் தமிழீழ அன்னைமடியில்

வீரவேங்கையே லெப்டினன்ட் நெல்சா - உன்
ஓராண்டு காலம் நினைவு கூரு முன்பே
அண்ணன் அன்பழகனும் உன்னடி ஒற்றினன்
கண்ணீர் மல்க ஓராண்டினை நினைவு கூருகின்றோம்.

இவருடன் 18 - 07 - 1991 இல் வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எங்கள் அஞ்சலிகள் உரித்தாகுக

**தாய், சகோதரர்கள்**

198, கோயில் வீதி,
நல்லூர்.

(2837)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

லாவது சுற்றை பூர்த்தி செய்துள்ள 1,25,000 குடும்பங்களுக்கு செப்டெம்பர் 6 ஆம் திகதி விசேட சான்றிதழ்களும் ஒவ்வொரு குடும்பத்தின் பெயரிலும் முதல் சுற்றாக வைப்

களும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையைசிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆடிமாத உலர் உணவு வழங்குவதில் தாமதம்

(மண்டைதீவு)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு ஆடி மாதத்தின் முதல் வாரத்திற்கான உலர்உணவு விநியோகம் இன்று வரைக்கும் வழங்கப்படவில்லை இதனால் பாவனையாளர்கள் தினமும்கூட்டுறவுக் கடைகளுக்கு அலைந்து திரிவதைக் காணக்கூடியதாகவுள்ளது. அத்தோடு தீவக இடம் பெயர்ந்தோருடைய உலர் உணவு அட்டைகள் அனைத்தும் தற்பொழுது யாழ். செயலகத்தில் இருப்பதாக தீவக கிராமசேவகர்கள் தெரிவிக்கின்றனர்.

(88)

### போதைப்பொருள்

கொள்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நாட்டில் ஹெரோயின் பாவனையாளர் 40,000 முதல் 50,000 பேர் வரை உள்ளார்கள்.

1991 ஏப்பிரலில் ஒரு கிலோ 10,00,000 ரூபா விற்ற ஹெரோயின் செப்ரெம்பரில் 22,50,000 ரூபாவாக உயர்ந்துள்ளது.

### கொழும்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

''வடக்குக் கிழக்கு அதிகாரப் பகிர்வில் வடபகுதி முஸ்லிம்களின் எதிர்காலம் என்ன''? என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்றை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒழுங்கு செய்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை கொழும்பில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

## நவநீதம் கந்தையா

நவநீதம்கந்தையா 17.7.92-ல்காலமாகிவிட்டார். இவர் காலஞ் சென்றகந்தையாவின் அருமைமனைவியும் ஜெயரட்ணம் காலஞ்சென்ற தம்பரெத்தினம் யோகரட்ணம், ராஜரட்ணம் காலஞ் சென்ற பிலோமினா, நவரெட்ணம், மேரிஸ்ரெலாயூஜீன் (சென் அன்ரனீஸ் பாஷையூர் - சென் ஜோசவ் வித்தியாலயம் கொழும்புத்துறை) ஆசிரியையின் தாயாரும் ரங்கநாயகி, கொண்சி, ராசமணி, றஞ்சினி, ஜோண்சன், ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இல. 46
கொழும்புத்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

தகவல்:
வி. ஜோண்சன்
(மருமகன்)
(2836)

கொண்டு வருகிறது. இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும், நேர அட்டவணையும் பரீட்சார்த்திகளுக்கு வழங்குவ

## வீடமைப்புத் திட்டம்

மத்தியதர கீழ்மட்ட வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்று அமெரிக்க யு. எஸ். எயிட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பரீட்சை

டுத் தொழில் நுட்பப் பரீட்சை தேசிய உயர்தர டிப்ளோமா ஆகிய பரீட்சைகள் இடை நடுவில் கைவிடப்பட்டதாகவும் மற்றும் படவரைஞர் கற்றைநெறிக்கான பரீட்சை அறிவித்தபடி அறவே நடைபெறவில்லை என்றும் மாணவர் கவலை தெரிவிக்கின்றனர்

மேலும் விடைத்தாள் பொதிகளின் ஒரு தொகுதி யாழ். கல்வித் திணைக்களத்தில் இன்றுவரை இருப்பதாகவும் தெரியவருகிறது. மேற்படி பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி கொழும்பில் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகள்

தில் கடந்த புதனன்று இக்கருத்தரங்கு நடைபெறுவதாக இருந்தது.

இந்த கருத்தரங்கு ரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணம் எதையும் இந்த அமைப்பின் தலைவரான டாக்டர் எம்.பஸிலிநியார் கூறவில்லை என்ற போதும் இதனால் பொது மக்களுக்கு ஏற்பட்ட அசெளகரியங்களுக்காக வருத்தம் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் இந்தியத் தூதுவர் என்.என்.ஜா அமைச்சர் தொண்டமான் பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை ஆகியோர் உரையாற்ற இருந்தனர்.

### காசுத்தாள் கடத்தல்

(கொழும்பு)

சிங்கப்பூருக்கு அனுப்பப்படுவதற்காக மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் கைபற்றப்பட்ட தேயிலைப் பார்சலொன்றிலிருந்து 1 இலட்சம் டாலர்வெளிநாட்டு நாணயத்தாள்கள் இருக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### இராணுவ

கள் கொள்ளையிடப்பட்டன.

உதயன் லிங்கேந்திரன் (வயது 18, இலுப்பையடிச்சேனை, கன்னங்குடா), சீனித்தம்பி சந்திரா (வயது 15), விநாயகமூர்த்தி உலகம்மா (வயது 55), சரவணை தவேந்திரன் (வயது 18, பாலம் போட்டமடு), சரவணை கோணேசன் (வயது 25, உப்புக்குளம்), சரவணை போகராசா (வயது 35) ஆகிய தமிழ்ப் பொதுமக்களே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள் ஆவர்.

அரசரத்தினம் (வயது 25, பன்சேனை), அழகிப்பொடி சின்னவன் (வயது 38) ஆகியோர் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டனர்.

கப்பட்டிருந்த இடங்களில் மக்கள் பெருந்திரளாகச் சென்று தமது இறுதி அஞ்சலிகளை வேங்கைகளுக்குச் செலுத்தினர்.

பிற்பகல் 1.30 மணியளவில் புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல பண்ணையில் விதைக்கப்பட்டன

(21)

### வைத்திய

கிழக்கில் உள்ள நோயாளர் தங்கி சிகிச்சைபெறக் கூடிய ஒரேயொரு வைத்தியசாலை இதுவாகும்.

இவ்வைத்தியசாலை மூடப்பட்டுக் கிடப்பதனால் தாளையடி, மருதங்கேணி, செம்பியன் பற்றுப்பகுதிகளிலுள்ள மக்கள் சிகிச்சை பெறுவதற்காக 17 மைல்கள் தொலைவிலுள்ள மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

அப்பகுதியிலுள்ள பொதுஸ்தாபனங்கள், வைத்தியசாலையைத் திறந்து வைத்திய சேவையை மீண்டும் வழங்கக் கோரி பிராந்திய சுகாதாரச் சேவைப் பணிப்பாளருக்குக் கடிதம் எழுதியுள்ளன.

(36)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**17. 07. 1992**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4924

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
28-1414, 40-2394, 28-4550, 28-1754, 26-6983, 24-8785, 26-6075, 22-8096, 27-9105, 28-5294, 26-5113, 42-2432, 27-6583, 26-525, 26-1658, 27-8999, 24-4222, 22-4862, 27-954, 70-3727, 70-3708, 72-8949, 70-9645, 70-5273, 70 4 [illegible]3, [illegible]5 954, 26-7393

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
26-5870, 27-2034, 26-403, 26-5882, 42-9345, 24-8971, 25-4164, 36-5707, 37-292, 36-6872, 24-9645